# அன்பாந்த உலகவாழ் தமிழ் மக்களே!!!
# விழுது இளைஞர்களின் பணிவான வேண்டுகோள்.

சுதந்திரம், சமத்துவம், பொதுவுடமை கொண்ட இன் நாட்டிலே 22-03-2003 அன்று விழுது உறுப்பினர்களில் ஒருவரான (தலைவர் என்று பலரால் அழைக்கப்படும்) திரு. சந்திரதாஸ் அவர்களை இரக்கமற்ற முறையில் ஒரு கை உடைக்கப்பட்டு கம்பத்தில் கட்டி இரண்டு மணி நேரசித்திரவதை மக்கள் முன்னிலையில் அரங்கேறியிருப்பது யாவரும் அறிந்ததே. இச் செயலை புலம் பெயர்ந்த மண்ணில் நடத்தியிருப்பது வெள்ளைக் காரனையும் வெட்கி தலை குனியவைக்கும் செயலே ஆகும். இதை உணர்வுள்ள தமிழர்களின் செயல் என்பது மல்லாந்து கிடந்து எச்சில் துப்பிய விடையமே ஆகும்.

விழுது கலை ஊக்கிவிப்பு மன்றமானது, பல நூற்றுக் கணக்கான இளைஞர் களையும் யுவதிகளையும் கொண்ட மாபெரும் மன்றம். இதில் தனி ஒரு மனிதனின் தவறை சுட்டிக்காட்டும் பொருட்டு ஓட்டு மொத்த விழுது இளைஞர்களின் இரத்தத்தை சூடாக்கி குளிர்காய நினைப்பது உணர்வுள்ள மக்களின் நற்செயல் ஆகாது.

மேற்படி மன்ற உறுப்பினர்கள் பலரோடும் பலகாலமாக தப்பாக நடந்து கொண்டார் என்றும், அதை அவர்கள் மூடிமறைத்தார்கள் என்றும், பொலீஸ் விசாரணைக்குப் பயந்து தலைமறைவானார்கள் என்றும், எழுதப்பட்ட வர்ணனையாளர்களின் முட்டாள் வரிகள் பல இளைஞர்களின் வாழ்க்கையில் வீசப்பட்ட கூரியவாளேயாகும். இதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

விழுது கலை ஊக்குவிப்புமன்றமானது ஒரு மாபெரும் அருவியே அதில் மலவாசல் கழுவும் சிலர் கண்டு அருவி தன் திசைகளை மாற்றிக் கொள்ளாது.

இவ் இரக்கமற்ற செயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட அவரது குடும்பத்தினர்களுக்கும் சக மன்ற உறுப்பினர்களுக்கும் நண்பர்களுக்கும் விழுது கலை ஊக்குவிப்பு மன்றம் தன் ஆழ்ந்த அனுதபாத்தை தெரிவித்துக்கொள்கிறது.

எமது அன்பான உலகவாழ் தமிழ் மக்களே உங்கள் அசைக்க முடியாத ஆதரவிலும் உறுதியான நம்பிக்கையிலும் அன்பான அரவணைப்பிலும் மட்டுமே எங்களின் எதிர்காலம் நிச்சயிக்கப்படும்.

*-நன்றியுடன்-*

**விழுது கலை ஊக்குவிப்பு மன்றம்.**

குறிப்பு : யார் இவர்கள்?
மாற்றான் தெருவில் ஆட்சி செய்ய தமிழ்ச்சினிமா ரசிகர்களா?